அரசியல் தாத்தா. சபாநாயகர் அவர்கள் சொன்னது போல் தீட்சிதர் அவர்கள் இங்கு நல்ல முறையில் பேசுகின்றவர்களுக்கு அருகே அமர்ந்து ஊக்கமும் பாராட்டும் அளிப்பவர்.

தேசீயப் போராட்டத்தைப் பற்றியெல்லாம் மறந்திருக்கக் கூடிய இந்தக் காலத்தில் அதை நமக்குக் கவனமூட்டும் வகையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள் தீட்சிதர் ஆவார்கள். அந்தக் காலத்தில் ஆஷ் துரையும் மற்றும் ஆங்கிலேயரும் இந்திய அரசியலில் ஈடுபட்டிருந்த பெரியார்களை அவமதித்து சிரமத்திற்கு உள்ளாக்கிய காலத்தில் நெல்லையில் வீர இளைஞர்கள் சேர்ந்து வ. வே. சு. அய்யர் தலைமையில் கூடி, ஒரு வெள்ளைக்காரனுக்கு ஒரு இந்தியன் சாகத்தான் வேண்டுமென்ற முறையில் ஒவ்வொருவரும் ஒரு துப்பாக்கி, ரிவால்வர் வைத்துக் கொள்ள வேண்டுமென்று முடிவு எடுத்தார்கள். அன்று ஆஷ் துரையை ரயில்வே ஸ்டேஷனில் வைத்துச் சுட்டுவிட்டு, தன்னைச் சேர்ந்தவர்கள் பிடிபட்டு விடக்கூடாது என்பதற்காக தானும் அதே துப்பாக்கியினால் வாயில் சுட்டுக் கொண்ட வாஞ்சி அய்யருடைய தோழர் நம்முடைய பெரியார் தீட்சிதர் அவர்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அப்படிப்பட்ட தேசீயவாதிகளைப் பற்றி இன்று கேட்டு அறிய வேண்டுமென்று சொன்னால் 81 வயதை அடைந்த தீட்சிதர் போன்றவர்களால்தான் சொல்ல முடியும். அந்த வாஞ்சி அய்யரைப் பற்றியும் மற்ற தேசீயத் தலைவர்களைப் பற்றியும் கருத்துக்களைப் புத்தக ரூபமாகத் தரவேண்டுமென்று நான் பல முறை அவர்களை வேண்டிக் கொண்டிருக்கிறேன். அந்த தேசீய வர்க்கத்தைச் சேர்ந்த பல குடும்பங்கள் இன்று பலவிதமான இன்னல்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள். கட்டபொம்மன் குடும்பத்துக்கு உதவியதுபோல் மற்ற தேசீய வர்க்கத்தில் வந்த குடும்பத்தினருக்கும் உதவ வேண்டும். அந்த முறையில் அந்த தேசீய உணர்ச்சியுடன் பாடுபட்டவர்களைப் பற்றி அறிந்து கொள்ளும் வகையில் புத்தகத்தைக் கொண்டுவர முதலமைச்சர் அவர்கள் உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அத்தகைய ஒரு புத்தகத்தை எழுதுவதற்கும், தொடர்ந்து பொதுநலத் தொண்டாற்றுவதற்கும் தீட்சிதர் அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து நமக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்று கேட்டு, அவர் பல்லாண்டு வாழ இறைவனைப் பிரார்த்தித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

5. நடைமுறைக் கேள்விகள்

(அ) பேரவை நடவடிக்கை சுருக்க வெளியீட்டில் 29—1—1969-ல் அவை ஒத்திவைக்கப்பட்ட காரணம் தரப்படாமை

THIRU K. VINAYAKAM : Sir, I rise on a point of order. I have in my hand a brief record of proceedings that took place on 29th January 1969, when we met here last. You were presiding as Deputy Speaker on that date. You might recall that when Thiru Dhanushkoti was speaking, all of a sudden, a

gloom overtook this House and one Minister after the other, was going away to the hospital to find out what exactly was the position with regard ao the Condition of the then Chief Minister. When Thiru Dhanushkoti was containing his speech, Hon. Madhavan called me out and told me something and then he came into the House. He was the only Minister then in the House. (The Hon. Thiru M. MUTHUSWAMY : I was also in the House). I stand corrected. That does not make much of a difference to what I am going to say. The Hon. Thiru Madhavan tried to explain something but he was fumbling. He expressed a few words and he sank into his seat. I got the clue. I said that since the Chief Minister's condition was bad, why should we prolong the discussion. I moved a resolution that this House might adjourn and then the The Hon. Deputy Speaker adjourned the House.

All these details do not find a place here in this record. It simply says that the House adjourned at 11-15 a.m. to meet again at 9 a.m. on 30th January 1969. On what ground did it adjourn ? What was the reason for adjournment ? That should have found a place in the record. I do not want to take the credit that I should be figuring or Thiru Madhavan should be figuring. But what was the actual reason for the adjournment of the House ? That reason must find a place in the rceord. When it does not find a place in the record, is it in order ? I want a ruling from the Chair.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார்களே யொழிய அந்தத் தீர்மானம் முறையாக முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டு, வாக்கெடுப்பு எடுக்கப்பட்டு நிறைவேற்றப்படவில்லை. அதை நான் ஒரு குறையாகச் சொல்லவில்லை. அன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடந்து கொண்ட முறைக்கு பேரவையின் பாராட்டுதல்கள் உண்டு. அந்த நிகழ்ச்சிகள் இதில் ஏன் இடம் பெறவில்லை என்பதற்கு நான் சொல்லியதுதான் காரணம். அப்படி அது அதில் இடம் பெறவேண்டுமென்று சொன்னால், அதை இந்தக் குறிப்பேட்டில் போடுவதற்கு பேரவைக்கு எந்தவிதமான தடையும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால் அதையும் போட்டு விடலாம். முற்பகல் 10 30

(ஆ) ஆளுநரின் பேருரை மீதான விவாதத்தைத் தொடர்ந்து நடத்தல்

Thiru K. VINAYAKAM : I raise another point of order. I am doing this in the interest of the entire House. I want to set up some healthy conventions.

Our Governor delivered a speech here portraying the policies of the Government headed by the late Mr. C. N. Annadurai. Discussion on it was going on. But in the middle some